1975 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பல்வேறு பணிகள் பற்றியும் இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற பணிகள் பற்றியும் கூறப்பட்டிருக்கின்றன, ஆகவே அதைப்பற்றி நான் விரிவாக எடுத்துச் சொல்லவேண்டியதில்லை என்று நினைக்கிறேன். அதனை இந்த அவையினுடைய நடவடிக்கைக் குறிப்பிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு விவாதத்தைத் தொடங்கலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. எ. சுவாமிதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது எங்கள் கட்சியின் சார்பிலே கொடுக்கப் பட்டிருக்கிற பல வெட்டுத் தீர்மானங்களையொட்டி பல கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

கல்விக்காக இந்த அரசு, ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், தொழிற் கல்வி மற்ற எல்லாக் கல்விகளையும் சேர்த்துப் பார்த்தால், ஏறத்தாழ 148 கோடி ரூபாய் செலவழிக்கிறது. எவ்வளவுதான் நாம் அதிகமாகப் பணம் செலவழித்தாலும்கூட தொடக்கப் பள்ளியிலிருந்து கல்லூரிக் கல்வி வரையிலே ஆண்டுதோறும் பலப் பல கல்விக்கூடங்களைத் திறந்து கொண்டிருக்கிறோம். அதனுடைய பயன், விளைவு மொத்தத்திலே இந்த நாட்டிலே எப்படியிருக்கிறது என்று பார்த்தால் இன்டிசிப்ளின், ஒழுக்கச் சிதைவு இருப்பதை மறுக்கமுடியாது.

நாட்டு மக்களிடையே நாம் கொண்டுவரவேண்டிய ஒழுக்கத்தைப் பற்றி நாம் அதிகமாகச் சிந்திக்க வேண்டும். பள்ளிக்கூடங்களிலே தொடக்கப் பள்ளிகளில் இருந்து உயர்நிலைப்பள்ளி, கல்லூரிகள் வரையிலே பார்த்தால் சிறிய சிறிய காரியங்களுக்காக எல்லாம் ஸ்ட்ரைக் செய்வதைப் பார்க்கிறோம். அதிருப்தியான நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். ஒரு ஆசிரியரை மாற்றிவிட்டால்கூட அந்த ஆசிரியர்தான் வேண்டுமென்று மாணவர்கள் அதற்காக ஸ்ட்ரைக் செய்கிறார்கள். ஒரு பள்ளிக்கூட மாணவனை போலீஸார் தாக்கினாலும் அல்லது பேருந்து கண்டக்டரோடு வாக்குவாதம் நடந்தாலும் அதற்காக ஸ்ட்ரைக் நடக்கிறது. இதுவெல்லாம் எதைக் காட்டுகிறது என்றால் இன்டிசிப்ளின் மாணவர்கள் மத்தியிலே இருக்கிறது என்பதைத்தான். அதை எப்படி அகற்றுவது என்று சிந்திக்கவேண்டும். படிக்கின்ற மாணவர்களுக்கு ஒழுக்கக் கல்வி கொண்டு வரவேண்டும். என்.சி.சி., ஏ.சி.சி., ஸ்கவுட் போன்றவற்றை கட்டாய மாக்கவேண்டும்.

அதோடு, ஸ்போர்ட்ஸையும் கட்டாயமாக ஆக்கவேண்டும். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலையைப் பார்த்தால் பல பள்ளிக்கூடங்களில் விளையாடுவதற்குத் தேவையான இடமே இருக்காது. ஒரு ஹைஸ்கூலை எடுத்துக்கொண்டாலும்கூட பள்ளிக்கூடம்தான் இருக்கிறது, 10 சென்ட் இடம்கூட கிடையாது விளையாடுவதற்கு. டிரில்மாஸ்டர் இருப்பார், இடம் இருக்காது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் போக்கி என்.சி.சி., ஏ.சி.சி., ஸ்கவுட், ஸ்போர்ட்ஸ் இவற்றையெல்லாம் கண்டிப்பாக மாணவர்களுக்குக் கட்டாயமாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.